

கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.கழக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தை முடித்துக்கொண்டு, பல்லடம் செல்லும் வழியில் வெள்ளகோவில் அருகே ஓலப்பாளையத்தில் உள்ள சாலையோர கடையில் தேநீர் அருந்தினார். உடன் காங்கேயம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளரும், துணைப் பொதுச் செயலாளருமான, அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், கழக மகளிர் அணி துணை செயலாளர், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக மாணவர் அணி செயலாளர் வீரமணி ஜெயகுமார், கழக மகளிர் அணி பிரச்சாரகுழு செயலாளர் செ.உமா மகேஷ்வரி, கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர்கள் சத்யா பழனிக்குமார், மாலதி நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, முதல்கட்ட பரப்புரையை முடித்துள்ள நிலையில், 2–ஆம் கட்டமாக புதுச்சேரி மாநிலத்திலும் அவர் மேற்கொள்ள உள்ள பரப்புரை பயண விவரம் வருமாறு :

**7.4.2026 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தொகுதிகள் | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | முதலியார்பேட்டை, உப்பளம், பாகூர். | மரப்பாலம், முதலியார்பேட்டை. |
| காலை 10.45 மணி | வில்லியனூர், திருபுவனம், மங்கலம். | கிழக்கு சந்நிதி வீதி, வில்லியனூர். |
| காலை 11.30 மணி | நெல்லித்தோப்பு, உருளையான்பேட்டை, காலாப்பட்டு, கதிர்கிராமம், ராஜ்பவன். | அண்ணா சிலை எதிரில், அண்ணா சாலை, புதுச்சேரி. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை–18

கலைஞர் 100
1924 - 2023



# சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 7.4.2026 | காலை 10.00 மணி | திருவள்ளூர் மேற்கு | திருத்தணி |
| ” | பகல் 12.00 மணி | இராணிப்பேட்டை | சோளிங்கர் |
| ” | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | ஆரணி |
| ” | மாலை 6.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | போளூர் |
| ” | இரவு 8.00 மணி | ” | கலசப்பாக்கம் |
| 8.4.2026 | காலை 10.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் |
| ” | பகல் 12.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | சங்கராபுரம் |
| ” | மாலை 4.00 மணி | சேலம் கிழக்கு | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சேலம் மத்திய | சேலம் தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | ” | சேலம் மேற்கு |
| 9.4.2026 | காலை 10.00 மணி | நாமக்கல் கிழக்கு | நாமக்கல் |
| ” | பகல் 12.00 மணி | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் |
| ” | மாலை 4.00 மணி | ஈரோடு மத்திய | பவானி |
| ” | மாலை 6.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு |
| ” | மாலை 7.00 மணி | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து இன்று

# சீர்காழியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசுகிறார்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா முருகன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

மயிலாடுதுறை, ஏப். 7 – மயிலாடுதுறை மாவட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பரப்புரை செய்ய (7.04.2026) இன்று மாலை 4.00மணிக்கு சீர்காழி நத்தம் பைபாஸ் சாலை அருகே பொதுக் கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரிக்க திராவிட நாயகர் – முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளார்கள் இந்த மயிலாடுதுறை மாவட்ட கழகத்தினர், ஜனநாயக முற்போக்கு கூட்டணி பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இது குறித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியி ருப்பதாவது:–



காலை உணவு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் மட்டுமின்றி, உலக நாடு களே திரும்பி பார்க்கும் அளவுக்கு அனைத்துத் தரப்பு மக்களுக்கு மான பொற்கால ஆட்சியை தந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இந்த சந்ததிகளுக்கு மட்டுமின்றி எதிர்கால சந்ததிகளுக்கும் சேர்த்து தொலைநோக்கு பார்வையோடு எண்ணற்ற அரிய திட்டங்களை தந்து அதனை நிறைவேற்றி வருகிறார்.

2026 தேர்தலிலும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியை தேர்ந்தெ டுக்க தமிழ்நாட்டுமக்கள் தயாராகிவிட்டனர். தமிழ்நாட்டில் பொற்கால ஆட்சி 2026லும் திராவிட நாயகர் முதலமைச்சர் தளபதிஅவர்களின் சீரிய ஆளுமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சியாக தொடர மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட் டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழிக்கு வருகை தர உள்ளார்கள் ”எல்லோருக்கும் எல்லாம் என ஏழைகளின் கண்ணீர் துடைத்து திமுகவுக்கு வாக்களித்தவர்கள் மட்டுமல்லாமல் வாக்களிக்காதவர்களும் நாம் திமுகவுக்கு வாக்களிக்கவில்லையே என்று வருத்தப் படும் அளவிற்கு தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் பயன் அளிக்கும் திட்டங்களை தந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தேர்தல் அறிக்கையில் உலக பொருளாதார வல்லுனர்களை திரும்பிப் பார்க்க வைத்த இல்லத்தரசிகள் தங்களுக்கு தேவையான பொருட்களை தாங்கள் பகுதியிலே தாங்கள் விரும்பிய பொருட்களை வாங்கிக் கொள்ள ரூ.8,000 த்திற்கான கூப்பன் திட்டம், மகளிர் உரிமைத் தொகை ரூ. 2,000 ஆக உயர்த்திடுவது மற்றும் மீட்டர் இல்லா மின்சாரம், நெல்கொள்முதல் விலை உயர்வு உள்ளிட்ட விவசாயிகளின் உள்ளம் மகிழ்வித்து, திட்டம் தந்த ஈடு இணையில்லா தலைவராய், சமூக புரட்சியாய் எட்டாம் வகுப்பு வரை காலை உணவு திட்டத்தை விரிவு படுத்தித்தந்திருக்கும் நாம் திராவிட நாயகர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சீர்காழியில் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட் பாளர்களான பூம்புகார் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் நிவேதா எம் முருகன் எம் எல் ஏ, சீர்காழி சட்டமன்றத் தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் செந்தில் செல்வன், ஆகியோருக்கு உதய சூரியன் சின்னத்திலும் மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஜமால்முகமது யூனுஸ்க்கு கை சின்ன த்திலும் அதேப்போல் நாகை மாவட்டம் வேதாரணியம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மா.மீ.புகழேந்தி, நாகை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர எம்.எச்.ஜவாஹிருல்லா, ஆகியோருக்கு உதய சூரியன் சின்ன த்திலும், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் டி.லதா விற்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திலும் 1வாக்கு வாக்கு சேகரிக்க வருகை தந்து பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினர் மற்றும் கழக மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி களின் நிர்வாகிகள், வார்டு மற்றும் கிளைக் கழகம் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும், ,கழக மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், பொது மக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொன் கிறேன்.

இவ்வாறு மயிலாடுதுறைமாவட்டச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



திருச்சி திருவெறும்பூர் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பொன்மலை ரயில்வே பணிமனைக்கு பணிக்குச் சென்ற தொழிலாளர்களிடம் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்வில் கலந்துகொண்ட நிர்வாகிகள் தி.மு.க. மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், பகுதிச் செயலாளர் தர்மராஜ், வட்டச் செயலாளர் வரதராஜன், தொழிற்சங்கங்கள்: SRMU நிர்வாகிகள் வீரசேகரன், முருகானந்தம், விஜயகுமார், முகேஷ், ரமேஷ் மற்றும் ரயில்வே தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டணி கட்சிகள்: தே.மு.தி.க. பொருளாளர் மில்டன் குமார், பிரித்தா, பகுதிச் செயலாளர் அருள்ராஜ் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாகப் பங்கேற்றனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.டி.என்.வி. எஸ்.செந்தில்குமார் காரிமங்கலம் மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட கும்பாரஅள்ளி பொதுமக்களைச் சந்தித்து,திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார்.உடன் தேர்தல் பார்வையாளர் தடங்கம் பெ.சுப்ரமணி உள்ளார்.



கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கோவை காந்திமாநகர் பகுதியில் வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வனுக்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரத்தை துவக்கி வைத்தார். இதில் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி, பகுதி கழக பொறுப்பாளர் அஞ்சுகம் பழனியப்பன், மாநகராட்சி மேயர் க.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகர் மாவட்ட துணை செயலாளர் கல்பனா செந்தில், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எம்.தண்டபாணி உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோத்தகிரி குமரன் நகர் பகுதியில்... குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்கு தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட வெற்றி வேட்பாளர் கே. எம். ராஜ் கழக 5 ஆண்டு சாதனைகளை எடுத்துரைத்து பொதுமக்களை சந்தித்து வாக்குச் சேகரித்தார். உடன் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் கே. போஜன், கோத்தகிரி ஒன்றிய கழகச் செயலாளர் நெல்லை கண்ணன்,நகர செயலாளர் காளிதாஸ்,CPI மாநிலத் தலைவர் பெள்ளி, வட்டார காங்கிரஸ் தலைவர் சில்லபாபு, உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.